# விழிப்புடன் இருங்கள்

## சுரண்டல் மற்றும் கடத்தலுக்கு எதிராக உங்களையும் உங்கள் குடும்பத்தையும் பாதுகாக்குங்கள்



## வளங்கள் மற்றும் தொடர்புகள்


GOUVERNEMENT Liberté Égalité Fraternité
OFII
UNHCR L'Agence des Nations Unies pour les réfugiés
OIM ONU MIGRATION
AC.SÉ Dispositif national
CONTRE LA TRAITE DES ÊTRES HUMAINS
France Terre d'Asile
forum réfugiés
Secours Catholique Caritas France
Croix-Rouge française



# பாதுகாப்பாக இருங்கள்

விழிப்புடன் இருங்கள், குறிப்பாக ஒரு நபர், அது பெண்ணாக அல்லது ஒரு ஆணாக இருந்தாலும் சரி...

**உங்கள் அடையாள ஆவணங்களைப் பெற முயற்சி செய்தால்** (அதிகாரிகள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட சங்கங்கள் தவிர),

**உங்கள் தொலைபேசி, கம்ப்யூட்டர்** அல்லது தகவல்தொடர்பு சாதனங்களை எடுக்க முயற்சித்தால்,

**உங்கள் குடும்பம்** அல்லது நெருங்கியவர்களிடமிருந்து உங்களைப் **பிரிக்க** முயற்சித்தால்,

ஒரு **வேலை செய்ய** அல்லது **உடலுறவு கொள்ள** கட்டாயப்படுத்தினால் (கடனை அடைப்பதுக்காக இருந்தாலும்),

**பணத்திற்கு ஈடாக** உங்களுக்கு போக்குவரத்து, **உணவு போன்ற** உதவி செய்வதாக அல்லது நிர்வாக, சட்ட அல்லது சமூக ஆதரவை வழங்குவதாக வாக்குளித்தால்,

உங்களுக்கு நம்பத்தகாத வாக்குறுதிகளை அளித்தால்,

உங்களை வேலை செய்ய வைக்கிறார், ஆனால் உங்களுக்கு சம்பளம் கொடுக்கவில்லை அல்லது உங்களை **மோசமான நிலைமைகளில் வேலை செய்ய வைத்தால்.**

விஷயங்களைச் செய்ய நீங்கள் கட்டாயப்படுத்தபடுவதாக உணர்கிறீர்களா? நீங்கள் சுரண்டப்படுகிறீர்களா, அச்சுறுத்தப்படுகிறீர்களா அல்லது தாக்கப்படுகிறீர்களா? நீங்கள் ஒரு நிபுணரிடம் இதைப் பற்றி பேசலாம் மற்றும் பாதுகாக்கப்படலாம். இந்த கையேட்டில் நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய சங்கங்கள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பு விவரங்கள் காண்பீர்கள்

பெண்கள், ஆண்கள் மற்றும் குழந்தைகள் சுரண்டுவது சட்டத்தால் தண்டிக்கப்படக்கூடிய பல வடிவங்களில் இருக்கலாம்: பாலியல் சுரண்டல், வீட்டு அடிமைத்தனம், கட்டாய பிச்சை எடுத்தல், கட்டாய உழைப்பு, குற்றங்களைச் செய்ய கட்டாயப்படுத்துதல், கட்டாயத் திருமணங்கள்...

# திடீர் ஆபத்து ஏற்பட்டால், நீங்கள் போலீசிடம் உதவி கேட்கலாம் அல்லது 17 அல்லது ஐரோப்பிய அவசர எண் 112 க்கு போன் அடிக்கலாம்







01.

# உங்கள் தகவலைப் பாதுகாக்கவும்

உங்கள் தனிப்பட்ட தகவல்கள் மற்றும் அடையாள ஆவணங்கள் கவனமாக கையாள வேண்டியவை மற்றும் பாதுகாப்பான,ரகசியமான இடங்களில் வைக்கப்பட வேண்டும். அவற்றைப் படம் எடுத்து உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள், தொலைந்து போனால் இது உங்களுக்கு உதவக்கூடும். இவை கேட்கப்படும் போது, அதிகாரப்பூர்வ அதிகாரிகள் மற்றும் நிறுவனங்களுடன் மட்டுமே பகிர்ந்து கொள்ளுங்கள்.

உங்களையும் உங்கள் நிலைமையையும் தப்பாக பயன்படுத்திக் கொள்வதுக்கு தீங்கிழைக்கும் நபர்கள் தங்கள் மேல் நம்பிக்கையை உருவாக்க முயற்சிக்கலாம். உங்கள் தனிப்பட்ட தகவலை ஒருபோதும் பகிர்ந்துக் கொள்ளதீர்கள் மற்றும் சமூக ஊடகங்களில் அல்லது சரிபார்க்கப்படாத வலைத்தளங்களில் சந்திக்கும் அந்நியர்களிடமிருந்து எதையும் ஏற்க வேண்டாம்.

02.

# நெருங்கியவர்களுடன் தொடர்பில் இருங்கள்

உங்கள் குடும்பம் அல்லது நெருங்கியவர்களுடன் தொடர்பில் இருங்கள். உங்கள் குடும்பம் அல்லது நெருங்கியவர்களிடமிருந்து பிரிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ளாதீர்கள்.

உங்கள் தொலைபேசியை உங்களுடன் வைத்திருங்கள்.

ஒரு நம்பகமான நபரின் தொலைபேசி எண்ணை மனப்பாடம் பண்ணிக் கொள்ளுங்கள். நீங்கள் எப்போதாவது ஆபத்தில் மற்றும் சுதந்திரமாக பேச முடியாது ஒரு நிலையில் இருந்தால் நீங்கள் இருவரும் பயன்படுத்தக்கூடிய ஒரு ரகசிய சொல்லை சொல்லி வைத்துக்கொள்ளுங்கள் .

03.

# அதிகாரப்பூர்வ ஏற்பாடுகளுக்கு முன்னுரிமைக் கொடுங்கள்

பிரான்சில், உங்கள் நிர்வாக சூழ்நிலைக்கு ஏற்ப உங்களை வரவேற்க, கவனிக்க மற்றும் ஆதரவளிக்க அதிகாரப்பூர்வ மற்றும் இலவச சேவைகள் வைக்கப்பட்டு இருக்கின்றன

அதிகாரிகள் அல்லது அதிகாரப்பூர்வமான சங்கங்களால் வழங்கப்படும் சேவைகளுக்கு முன்னுரிமைக் கொடுக்கவும், தங்க ஒரு இடம் தேடும் போதும் கூட. உங்களுக்கு உதவி செய்யும் நிறுவனங்களின் மற்றும் சங்கங்களின் பெயர்கள் மற்றும் அதிகாரப்பூர்வ தகவல்களைக் கேளுங்கள்

பொதுப் போக்குவரத்தைத் முன்னுரிமைக் கொடுங்கள். நீங்கள் ஒரு தனிநபர் வாகனத்தில் ஏறினால், நம்பர் பிளேட்டை படம் எடுத்து நம்பகமான நபருக்கு அனுப்பவும்.

உத்தியோகபூர்வ தங்கும் விடுதிகளுக்கு வெளியே, நீங்கள் ஒருவருடன் தங்கியிருந்தால், அந்த நபரின் தகவல்களைப் (அடையாளம் மற்றும் முகவரி) பார்க்க கேளுங்கள்.



# யாரைத் தொடர்பு கொள்வது

## உதவி பெற ?

கடத்தலால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நேரடி உதவிகளை வழங்கும் அமைப்புகள்

| | |
|---|---|
| **தேசிய அமைப்பு பாதுகாப்பு புகலிடம் சேவை** | உள்ளூர் ஆபத்து அல்லது அதிக பாதுகாப்பற்ற நிலையில் உள்ள மனித கடத்தலின் பாதிப்புக்கு ஆளானவரின் வாழ்விடத்திலிருந்து தொலைவில் தங்குமிடம் மற்றும் ஆதரவை வழங்குகிறது. மனித கடத்தலின் பாதிப்புக்கு ஆளானவர்களுடன் தொடர்புகொண்டிருக்கும் தொழில்நுட்பமிக்கவர்களுக்கு ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலை வழங்குவதில் மையமாக செயல்படுகிறது. |
| **"மனித கடத்தலுக்கு எதிராக ஒன்றிணைவோம்" கூட்டு** | மனித உரிமைகளை மறுக்கும் அனைத்து வடிவங்களுக்கும் எதிரான போராட்டத்தை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு நெட்வொர்க் ஆகும் இந்த கூட்டு. 2007 ஆம் ஆண்டு "செகோர்ஸ் கேத்தலிக்" அமைப்பால் உருவாக்கப்பட்ட இந்த கூட்டு, 28 பிரெஞ்சு அமைப்புகளை ஒன்றிணைக்கிறது. நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாதிக்கப்பட்டவர்களுடன் இணைந்து செயல்படும் அமைப்புகள் இதில் அடங்கும். |
| **இடம்பெயர்வு சர்வதேச அமைப்பு (ஒ.ஐ.ம)** | தங்கள் சொந்த நாட்டிற்குத் திரும்ப விரும்பும் கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறு ஒருங்கிணைப்பு உதவியை வழங்குகிறது (எந்த நாடுகள் தகுதியுடையவை என்பதைக் கண்டறியவும்). |
| **கத்தோலிக்க நிவாரணம் கரிதாஸ் பிரான்ஸ்** | ஆபத்தில் உள்ளவர்கள் மற்றும் மனித கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு செவி கொடுத்தல், வரவேற்றல், வழிகாட்டுதல், ஆதரவளித்தல். |
| **பரிமாற்றம் மற்றும் சுரண்டலுக்கு எதிரான போராட்டத்திற்கான நகர்ப்புற ரிலே (ருயில்)** | சமூக, உளவியல் மற்றும் சட்ட ரீதியான ஆதரவை வழங்குகிறது. |
| **நவீன அடிமைத்தனத்திற்கு எதிரான அமைப்பு (சி.சி.இ.ம)** | சமூக, உளவியல் மற்றும் சட்ட ரீதியான ஆதரவை வழங்குகிறது. |
| **பறவைக்கூடு சங்கம் (எ.டி.ந)** | விபச்சாரத்தில் ஈடுபடுபவர்களுக்கு முழுமையான உதவியை வழங்குகிறது. |




| | | |
|---|---|---|
| அனைத்து வகையான சுரண்டல்கள் | BP Boîte Postale 1532, 06099 Nice Cedex 1<br>04 92 15 10 51 ((திங்கள்-வெள்ளி, 9h-18h)<br>ac.se@association-alc.org<br>www.acse-alc.org/fr | புரோவென்ஸ் ஆல்ப்ஸ் பிரஞ்சு ரிவியரா தேசிய அளவில் |
| அனைத்து வகையான சுரண்டல்கள் | 106 rue du Bac, 75007 Paris<br>06 71 00 69 90<br>contre.la.traite@secours-catholique.org<br>www.contrelatraite.org | பாரிஸ்<br>தேசிய அளவில் |
| அனைத்து வகையான சுரண்டல்கள் | 31, rue du Faubourg Poissonnière, 75009 Paris<br>01 40 44 06 91 ; iomparis@iom.int<br>france.iom.int | பாரிஸ்<br>தேசிய அளவில் |
| அனைத்து வகையான சுரண்டல்கள் | 106, rue du Bac, 75007 Paris<br>06 71 00 69 90<br>genevieve.colas@secours-catholique.org<br>www.secours-catholique.org | பாரிஸ்<br>தேசிய அளவில் |
| அனைத்து வகையான சுரண்டல்கள் | 06 59 18 71 66 / 06 98 39 70 42<br>ruelle33000@gmail.com<br>www.associationruelle.org | போர்டோ |
| உழைப்புச் சுரண்டல் | 169 bis Boulevard Auriol, 75013 Paris<br>01 44 52 88 90; info@ccem.org<br>www.esclavagemoderne.org | பாரிஸ்<br>தேசிய அளவில் |
| பாலியல் ஆதாயத்திற்காக சுரண்டல் | தலைமையகம் : 21 rue Château d'Eau, 75 010 Paris<br>போன்: 01 44 52 56 43 ; contact@adn-asso.org<br>நிறுவனங்களின் முகவரிகள் இங்கே கிடைக்கும்:<br>amicaledunid.org/presentation/#etablissements<br>www.amicaledunid.org | பாரிஸ், இல்-தே-பிரான்ஸ், சாம்பெரி, தூலூஸ்,மார்செய், ரென்னஸ், மொன்பெல்லியே, பிரெஸ்ட், கிரெனோபிள், லியோன் |


# யாரைத் தொடர்பு கொள்வது

## உதவி பெற ?

கடத்தலால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நேரடி உதவிகளை வழங்கும் அமைப்புகள் (தொடர்ச்சி)

| | |
|---|---|
| **பறவைக்கூடு இயக்கம் (ம.டி.ந)** | விபச்சாரத்தில் ஈடுபடுபவர்களுக்கு முழுமையான உதவியை வழங்குகிறது. |
| **மனிதர்களின் கடத்தலுக்கு எதிராக தலையீடு மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணி (ம.ஐ.ச.ட)** | பிணைய விபச்சாரம் மற்றும் பாலியல் பயன்பாட்டுக்காக விற்கப்படும் நபர்களுக்கு உதவி வழங்குகிறது. |
| **சிறைப்படுத்தப்பட்டவர்களுக்கு, விடுதலை** | தெருவில் வாழ்கின்ற அல்லது தெருவிலிருந்து வாழ்கின்ற நபர்களுக்கு உதவியை வழங்குகிறது. |
| **அல்தியா - அப்பார்ட்** | பாலியல் தொழிலில் ஈடுபட்டுள்ள அல்லது பாலியல் தொழிலுக்கு ஆளாகக்கூடிய எந்தவொரு நபருக்கும் (பெரியவர் அல்லது சிறுவர்) தங்குமிடம், ஆலோசனை மற்றும் ஆதரவை வழங்குகிறது. இது மனித கடத்தலின் ஒரு பகுதியாக இருந்தாலும் சரி, இல்லையென்றாலும் சரி. |
| **சங்கம் பலோமா** | பொது சுகாதார சங்கம், விபச்சாரத்தில் ஈடுபடும் நபர்களுக்கு ஆபத்து தடுப்பு நடவடிக்கைகளில் உதவுகிறது. மேலும், அவர்களுக்கு சுகாதாரம், சமூகம், நிர்வாகம் மற்றும் சட்டம் ஆகிய அனைத்து துறைகளிலும் முழுமையான ஆதரவை வழங்குகிறது. |
| **ஏஆர்எஸ் ஆன்டிகான்** | விபச்சாரிகளை தள்ளி வைப்பதை எதிர்த்துப் போராடுவது. மனித கடத்தலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி. |

**பெண்களுக்கு எதிரான வன்முறை (பிரெஞ்சில்)** **3919**




| | | |
|---|---|---|
| பாலியல் ஆதாயத்திற்காக சுரண்டல் | பிரதிநிதித்துவ முகவரிகள் கிடைக்கும் இடம்:<br>https://mouvementdunid.org/mouvement-du-nid/delegations/<br>01 42 70 92 40<br>www.mouvementdunid.org | பாரிஸ், இல்-தே-பிரான்ஸ், லெ மான், மார்செய், கேன், லில், பெசான்சோன், ட்ரூ, தூலூஸ், நீஸ், மொன்பெலியே, டூர், நான்த், ஓர்லியான், துலோன், அவிங்நோன், ஆன்ஜெர், லோரியன்ட், மெட்ஸ், ஸ்ட்ராஸ்போர்க், முல்ஹவுஸ், லியோன், ரூஅன் |
| பாலியல் ஆதாயத்திற்காக சுரண்டல் | வெள்ளிக்கிழமை காலைகளில் வரவேற்பு மற்றும் தகவல்,<br>PAD 2 rue de Suez, 75018 PARIS<br>contact@mist-association.org<br>mist-association.org | பாரிஸ் |
| பாலியல் ஆதாயத்திற்காக சுரண்டல் | 33, avenue Parmentier, 75011 Paris<br>01 49 23 89 90; siege@captifs.fr<br>www.captifs.fr | பாரிஸ் |
| பாலியல் ஆதாயத்திற்காக சுரண்டல் | 8, rue du Vieux Temple, 38000 Grenoble<br>04 76 43 14 06 ; contact@althea38.org<br>https://althea38.org/ | கிரெனோப்ள் |
| பாலியல் ஆதாயத்திற்காக சுரண்டல் | 33, rue Fouré, 44000 Nantes<br>09 54 40 97 43/ 06 31 63 98 40<br>contact@paloma-asso.org<br>www.paloma-asso.org | நான்த் |
| பாலியல் ஆதாயத்திற்காக சுரண்டல் | 10 rue Mazagran, 54000 Nancy<br>03 83 26 56 66<br>antigone@asso-ars.org | நான்ஸி |

வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான தேசிய அளவிலான போன் நம்பர். இது இலவசம் மற்றும் அழைப்போரின் பெயர் தெரிவிக்கப்படாது. (24 மணிநேரம் மற்றும் 7 நாள், பிரெஞ் மற்றும் தேவைப்பட்டால் 12 மொழிகளில்)

# யாரைத் தொடர்பு கொள்வது
## நீங்கள் மைனராக இருக்கும்போது ?

மைனர்களுக்கு நேரடி உதவிகளை
வழங்கும் அமைப்புகள்

| | |
|---|---|
| **"மனித கடத்தலுக்கு எதிராக ஒன்றிணைவோம்" கூட்டு** | மனித உரிமைகளை மறுக்கும் அனைத்து வடிவங்களுக்கும் எதிரான போராட்டத்தை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு நெட்வொர்க் ஆகும் இந்த கூட்டு. 2007 ஆம் ஆண்டு "செகோர்ஸ் கேத்தலிக்" அமைப்பால் உருவாக்கப்பட்ட இந்த கூட்டு, 28 பிரெஞ்சு அமைப்புகளை ஒன்றிணைக்கிறது. நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாதிக்கப்பட்டவர்களுடன் இணைந்து செயல்படும் அமைப்புகள் இதில் அடங்கும். |
| **கத்தோலிக்க நிவாரணம் கரிதாஸ் பிரான்ஸ்** | ஆபத்தில் உள்ளவர்கள் மற்றும் மனித கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு செவி கொடுத்தல், வரவேற்றல், வழிகாட்டுதல், ஆதரவளித்தல். |
| **பிரஞ்சு செஞ்சிலுவை சங்கம்** | மனித விற்பனைக்கு ஆளானவர்களுக்கும், அபாயத்தில் உள்ள நபர்களுக்கும் தகவல் அளிப்பது மற்றும் அவர்களை வழிநடத்துவது. |
| **தெருவிலிருந்து வெளியே (ஓர் லா ரூய்)** | அந்நிய தேசத்து தனியாக இருக்கும் குழந்தைகளை கண்டறிந்து, அவர்கள் சுரண்டப்படுவதில் இருந்து பாதுகாப்பதில் உதவுகிறது. |
| **எக்பாட் பிரான்ஸ் – கலை மிஷன்** | தெருவில் வாழும் தனியாக இருக்கும் குழந்தைகளுக்கு, ஆபத்தில் உள்ள குழந்தைகளுக்கு மற்றும் கடத்தலுக்கு ஆளான குழந்தைகளுக்கு சட்ட, சமூக மற்றும் உளவியல் ஆதரவை வழங்குகிறது. |
| **குழந்தைகளின் விபச்சாரத்திற்கு எதிராக நடவடிக்கை (எ.சி.பி.இ)** | பாலியல் பயன்பாட்டிற்கு ஆளான சிறுவர்கள் மற்றும் அவர்களைச் சுற்றியுள்ளவர்களுக்கான உதவியை வழங்குகிறது (மனோதிட்டமிடல் மற்றும் கல்வி உதவி, சட்ட உதவி). |
| **பறவைக்கூடு சங்கம் (எ.டி.ந)** | விபச்சாரத்தில் ஈடுபடுபவர்களுக்கு முழுமையான உதவியை வழங்குகிறது. |
| **அல்தியா - அப்பார்ட்** | விபச்சார நிலையில் அல்லது அப்படியாக ஆகப் போகும் அபாயத்தில் உள்ள சிறுவர்களுக்கு வரவேற்பு, செவிக்கொடுத்தல், வழிநடத்தல் மற்றும் கூட இருந்து செய்யும் உதவியை வழங்குகிறது. |

**குழந்தை பருவம் ஆபத்தில் எண் (பிரெஞ்சு அல்லது ஆங்கிலத்தில்) 119**




| | | |
|---|---|---|
| அனைத்து வகையான சுரண்டல்கள் | 106 rue du Bac, 75007 Paris<br>06 71 00 69 90<br>contre.la.traite@secours-catholique.org<br>www.contrelatraite.org | பாரிஸ்<br>தேசிய அளவில் |
| அனைத்து வகையான சுரண்டல்கள் | 106, rue du Bac, 75007 Paris<br>06 71 00 69 90<br>genevieve.colas@secours-catholique.org<br>www.secours-catholique.org | பாரிஸ்<br>தேசிய அளவில் |
| அனைத்து வகையான சுரண்டல்கள் | தலைமையகம்: 21 rue de la Vanne, 92100 Montrouge<br>07 81 96 72 49<br>contact.teh@croix-rouge.fr<br>www.croix-rouge.fr | பாரிஸ்<br>தேசிய அளவில் |
| அனைத்து வகையான சுரண்டல்கள் | 70, rue Douy Delcupe, 93100 Montreuil<br>01 41 58 14 65 ; contact@horslarue.org<br>www.horslarue.org | பாரிஸ் |
| அனைத்து வகையான சுரண்டல்கள் | +33 7 53 57 05 34 திங்கள் முதல் வெள்ளி வரை, 10h-17h (Whatsapp, மொழிகள் : அராபிய, திக்ரினியா, ஆங்கிலம், பிரஞ்சு)<br>ecpat-calais@ecpat-france.org | கலே |
| பாலியல் ஆதாயத்திற்காக சுரண்டல் | 14 rue Mondétour, 75001 Paris<br>01 40 26 91 51; contact@acpe-asso.org<br>acpe-asso.org | பாரிஸ் |
| பாலியல் ஆதாயத்திற்காக சுரண்டல் | தலைமையகம்: 21 rue Château d'Eau, 75 010 Paris<br>01 44 52 56 43 ; contact@adn-asso.org<br>நிறுவனங்களின் முகவரிகள் இங்கே கிடைக்கும்: amicaledunid.org/presentation/#etablissements<br>அர்ப்பணிக்கப்பட்ட தள வளங்கள்: jenesuispasavendre.org | இல்-தே-பிரான்ஸ், மார்செய், தூலூஸ், ரென்னஸ், மொன்பெல்லியே, லியோன் |
| பாலியல் ஆதாயத்திற்காக சுரண்டல் | 8, rue du Vieux Temple, 38000 Grenoble<br>04 76 43 14 06 ; contact@althea38.org<br>https://althea38.org/ | கிரெனோப்ள் |

ஆபத்தில் உள்ள  குழந்தை பருவத்துக்கான தேசிய அளவிலான இலவசம் மற்றும் அழைப்போரின் பெயர் தெரிவிக்கப்படாத போன் நம்பர் (24 மணிநேரம் மற்றும் 7 நாள், கிட்டதட்ட 185 மொழிகளில் மொழிப்பெயர்ப்பு) மற்றும் allo119.gouv.fr - இல் ஆன்லைன் உரையாடல்

